28th March 1969]

(இ) 1967–68-ம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 2,10,360·0 ஆகும்.

(உ) 1967–68-ம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | ரூ. | பை |
|---|---|---|
| (1) திரு மன்னு கவுண்டரின் விதவைக்கு வடார்க்காடு மாவட்டம், அல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மூலமாகக் கொடுக்கப்பட்ட தொகை. | 100 | 00 |
| (2) சென்னை மாநகர தீ விபத்துத் துயர் தணிப்பு நிதிக்குக் கொடுத்தது. | 10,000 | 00 |
| (3) சர்தார் படேல் ஜயந்தி விழாவை முன்னிட்டு, புதுடில்லி குடிமக்கள் மன்றத்திற்குக் கொடுக்கப்பட்ட தொகை. | 250 | 00 |
| (4) நொடித்துப்போன ஆலைகளில் வேலையிழந்த தொழிலாளர்களின் துயர்த் தணிப்பிற்காக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கொடுக்கப்பட்ட தொகை. | 2,00,000 | 00 |
| (5) காயமுற்ற முன்னாள் படைவீரர் செல்லப்பன் நாயருக்குக் கொடுக்கப்பட்ட தொகை. | | 10.00 |
| | 2,10,360 | 00 |

*Criminal Procedure Code.*

* 275 *Q.*—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to repeal section 109 of the Criminal Procedure Code or to drop all proceedings under that section; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ)—(இ) குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 109(பி) பிரிவை ரத்து செய்வது குறித்த செயற் குறிப்பை அரசு ஆய்வு செய்து வருகிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, குற்ற இயல் நடைமுறை சட்டக் கோவை என்பது ஆங்கிலத்தில் **Criminal Procedure Code** என்று சொல்லப்படுகிறதே அதற்குத் தமிழ் ஆக்கமா என்பதைத் தெளிவுபடுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆமாம்.

Thiru D. SANTOSHAM : When the Government are examining the position, will they give interim instructions to the Police not to resort to this *prima facie* obnoxious provision till the order is passed?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 55–வது பிரிவும் 109-வது பிரிவும் ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளது. எல்லாவற்றையும் நீக்க அரசாங்கம் கருதவில்லை. ஏ-பிரிவில் குற்றம் செய்வதற்கு ஏற்பாடு

செய்துகொண்டு இருப்பவர்களைக் கைது செய்ய வாய்ப்பு இருக்கிறது. இரண்டாவது பிரிவு ஜனநாயகத்துக்கு ஒத்து வராத பிரிவு போலத் தோன்றுகிறது. சொத்து இருப்பதற்கான சரியான முகாந்திரம் கொடுப்பதில் ஒரு பிரிவில் தவறுகள் நடப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அதைத் திருத்துவதற்காக சட்ட இலாகா பரிசீலித்து வருகிறது. போலீஸ் தலைமை அதிகாரியை அழைத்துப் பேசி காரணம் இல்லாமல் பி-பிரிவைப் பயன்படுத்துவதில் கண்காணிப்பு அவசியமென்று சொல்லியிருக்கிறோம். மாவட்டம் தோறும் கண்காணித்து அந்த வழக்குகள் அதிகமாகப் போடாமல் பார்த்துக்கொள்கிறார்கள்.

THIRU K. S. ABDUL WAHAB : May I know the clarification for Section 109 of the Criminal Procedure Code ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 109-ல் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. பி-பிரிவில் "that there is within such limits a person who has no ostensible means of subsistence" சொத்து இருந்து வாழ்வதற்கு ஏற்ற வகையில் அவர் இல்லை என்று கருதினால் கூட கைது செய்யலாம் என்ற வாசகம் இருக்கிறது. "and who cannot give satisfactory account of himself" என்பதற்கு உயர்நீதி மன்றம் பல வழக்குகளில் விளக்கம் கொடுத்திருக்கிறது. நம்முடைய நாட்டில், மக்கள் எல்லாம் மன்னர் என்று சொல்கிற நாட்டில் காரணம் சொல்லி விட்டால் கைது செய்யக் கூடாது என்று . மாற்றவேண்டுமென்று பரிசீலித்து வருகிறோம்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** சொத்து இல்லாமல் வாழ்வதற்கு வழிவகை இல்லாதவர்களைக் கைது செய்யலாம் என்று விதி இருப்பது ஒரு வேளை எல்லோரும் வாழ வகையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்ற "வெல்ஃபேர் ஸ்டேட்" என்ற அடிப்படையைக் கொண்டு வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*Headmaster, Hindu Elementary School, Valayaptti.*

* 276 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the salary of the Headmaster, Hindu Elementary School, Valayapatti, Sathur taluk in the Ramanathapuram district, has not been disbursed for the past six years; and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) தலைமை ஆசிரியரின் சம்பளம் 21—3—1963 லிருந்து கொடுக்கப்படவில்லை.

(இ) பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர் ஒருவருக்குப் பதிலாக, அவருடைய இடத்தில் இந்த ஆசிரியர் நியமிக்கப்பட்டார். பணி நீக்க ஆணைகள் விதிகளுக்குப் புறம்பானவையாக இருந்ததால், மேற்படி ஆசிரியரை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று மதுரையில் உள்ள பள்ளிகளின் கோட்ட மேற்பார்வையாளர் ஆணையிட்டார். பள்ளி நிர்வாகிகள் இந்த ஆணைகளைச் செயல்படுத்தவில்லை. மேல் முறையீட்டு அதிகாரிகளின் ஆணைகளைப் பள்ளி நிர்வாகிகள் செயல்படுத்தாததன் காரணமாக, பதிலாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர் குறித்து, மானியம் எவ்வளவு என்பதை விதிகளின்படி மதிப்பிட இயலவில்லை. சிறப்பான நேர்வாக அந்த ஆசிரியர் குறித்து மான்யத்தை மதிப்பிடுவதற்கு அரசு இப்பொழுது ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.